[1990 மார்ச் 21

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையிலே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கீழும், வேளாண்மைக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கவேண்டுமானால், ஐந்து ஆண்டுக்கு மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் தேவைப்படும். அதுவும், இப்பொழுது உள்ள சூழ்நிலையில் வேளாண்மைப் பட்டம் படித்த பட்டதாரிகள் 1,300-க்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க இயலுமா என்பதை வருங்காலத்தில் யோசிக்கலாம்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு, தற்போது நடந்து வரும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் ஆராய்ச்சி நிலையம், நல்ல மண் வளம், பல்கலைக் கழகம் அமைக்க கட்டிடம், போதுமான இடம் உள்ள காரணத்தினால், அதோடு இக்கல்லூரி வெள்ளி விழாக் காணும் மகிழ்ச்சிகரமான இவ்வாண்டில், மதுரை வேளாண்மை பல்கலைக் கழகம் அமைக்க கழக அரசு நடவடிக்கை எடுக்குமா என அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

குந்தா அணைத் தண்ணீர்

*2033 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அவினாசி, பல்லடம் தொகுதி விவசாயிகளுக்கு குந்தா அணையில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இல்லை.

1990 மார்ச் 21]

9-45 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கேள்வி ஒரு முக்கியமான கேள்வியாகும். 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்கள் தலைமையில் இங்கே அரசாங்கம் அமைத்தபோது, பாராளுமன்றத்தில் நான் உறுப்பினராக இருந்து அன்று இருந்த மத்திய அரசாங் கத்தினுடைய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களிடத்தில் பேசி, குந்தா கழிவுநீர்த் திட்டம் கோவை மாவட்டத்தில் வேறு எந்த நதி நீர் பாசனத் திட்டத்திற்கும் வழியில்லாத நிலையில், பல்லடம் அவிநாசி ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்குத் தண்ணீர் கொடுக்க குறைந்தபட்சம் குளம், குட்டைகளை நிரப்புவதற்கு தண்ணீர் கொடுக்க இந்த குந்தா நீர்த் திட்டத்தை, 'with sizeable inflow' தண்ணீர் கொடுக்க முடியும் என்று அவர் சொன்னதன்பேரில் அண்ணா அவர்களுக்கு நானே ஒரு மெமோரண்டம் கொடுத்தேன். அதன்பேரில் காரமடையில் ஒரு ஆபிஸ் கூட துவங்கி வேலை ஆரம்பித்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டது. அதற்குஎன்ன காரணமென்று தெரியவில்லை. அந்தத் திட்டத்தை அமலாக்குவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும். கொஞ்சம் செலவு ஜாஸ்தி யானாலும், இதன்மூலம் இரண்டு தாலுக்காக்கள் காப்பாற்றப் படும். அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் மேல் பவானித் திட்டம், கீழ் பவானித் திட்டம் என்று இரண்டு திட்டங்களாக இதனை அமல்படுத்தலாமா என்று 1947ஆம் ஆண்டிற்கு முன்னால் யோசிக்கப்பட்டது. பின்னர் கீழ் பவானித் திட்டம் மட்டும் போதுமென்று நினைத்து 1952ஆம் ஆண்டு அந்தத் திட்டம் முடிக்கப்பட்டு இன்றையதினம் அந்தப் பகுதியில் பாசன வசதியை கீழ் பவானி திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கிடை யில் அவிநாசி, பல்லடம் வட்டங்களில் தண்ணீர் வரவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. உடுமலைப் பேட்டையில் ஒரு பகுதியும் அதிலே சேருகிறது. உடுமலைப்பேட்டைக்கு பி.ஏ.பி. தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக் கில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தச் செய்தியை அரசு கவனத்தில் கொள்ளும்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, அவிநாசி, பல்லடம் பகுதி விவசாயிகளுக்கு குந்தாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய திட்டம் 1947ஆம் ஆண்டிற்கு முன்னாலும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலும், அதற்கு முன்பும் பரிசீலனை செய்யப்பட்டு வழித்தடங்களில் எல்லாம் இந்த வழியாகத்தான் குந்தா நீர் வருகிறது என்று போர்டுகள்

எல்லாம் கூட போடப்பட்டன. பின்னால் ஆய்வு செய்த அதிகாரிகள் மேட்டுப்பாங்கான பகுதியாக இருப்பதால் தண்ணீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்கிற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல சொல்லி, பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் இதற்கு வசதியானது என்று பின்னால் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆகவே, குந்தா கழிவுநீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்றாலும் பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் அவிநாசி, பல்லடம், கோயம்புத்தூர் தாலுக்காக் களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்ற முறையில், அதையாவது இந்த அரசு விரைந்து செயல்படுத்த முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்தில்லை. எனவே தான், கேரளா மாநிலத்தின் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பேபி ஜான் அவர்களுடன் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, குந்தா அணையிலிருந்து வருகிற தண்ணீர் பவானிசாகர் அணை மூலம் கீழ்பவானி திட்டத்தில் வருகிறது. இன்றைக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒருமுறைதான் தண்ணீர் விடப் படுகிறது. இந்த நிலையில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் மேலே அணைகளை உருவாக்கித் தண்ணீர் வழங்கு வதன் வாயிலாக ஏறத்தாழ $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் பாசனம் செய்கிற கீழ்பவானி பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படு வார்களா என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, கீழ் பவானித் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேல் பவானித் திட்டம் வரக்கூடாது என்று நீங்கள் சொல்கி றீர்களா ? அது வராது. (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

* 2075 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சாப்டூர் மலைப்பகுதியில் பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திற்காக சாப்டூரில் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அணைக்கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் ?